# GST ROAD NEWS

Email:gstroadnews@gmail.com **SELAIYUR** Weekly News Paper www.gstroadnews.com

Madambakkam, Camp Road, Mahalakshmi nagar, Kamarajapuram, Rajakilpakkam, Sembakkam

Vol:14 Issue-23 13 Sep 2026 -19 Sep 2026 4 Pages - Free Circulation Ct: 99628 80902






















## பிரிக்ஸ் மாநாட்டில் கூட்டுப் பிரகடனம் நிறைவேற்றம்.

டெல்லி பிரிக்ஸ் மாநாட்டில் பிரதமர் மோடியின் கோரிக்கையை ஏற்று ஒருமனதாக பிரகடனம் நிறைவேற்றம். நீண்ட பேச்சுவார்த்தைக்குப் பின் பிரகடனத்துக்கு பிரிக்ஸ் நாடுகள் ஒப்புதல் அளித்த நிலையில் நிறைவேற்றம். வர்த்தகத்தை சிதைக்கும் ஒருதலைபட்சமான வரி விதிப்புக்கு எதிராக பிரிக்ஸ் நாடுகள் கூட்டுப் பிரகடனம்.

ஈரான், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் போன்ற உறுப்பு நாடுகளுக்கு இடையே நிலவிய ஆழமான கருத்து வேறுபாடுகளையும் தாண்டி, தீவிர பேச்சுவார்த்தை நடத்தி இந்தியா ஒருமித்த கருத்தை வெற்றிகரமாக எட்டியது.

## காலை உணவு திட்டம் அன்புமணி கண்டனம்



காலை உணவுத் திட்ட விரிவாக்கத்திற்கான பெயர்ப்பலகைகள், தட்டுகள், டம்ளர்கள் மற்றும் பிற வசதிகளுக்கான செலவை அரசே ஏற்க வேண்டும். அதை தயார் நிலையில் வைக்கும்படி தலைமை ஆசிரியர்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலரால் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்” என்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தி உள்ளார்.இந்த செலவுகளை தலைமை யாசிரியர்கள் தலையில் கட்டக்கூடாது என்று அவர் கூறியிருக்கிறார்.

## தவெக பணிக்குழு நியமனம்

தவெகவின் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் இடைத் தேர்தல் பணிக்குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது. தேர்தல் கண்காணிப்பாளர்களாக அமைச்சர் ஆனந்த், அமைச்சர் செங்கோட்டையன், அமைச்சர் நிர்மல் குமார்தேர்தல் பொறுப்பாளர்களாக மதுராந்தகம் (தனி) : அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தாராபுரம் (தனி) : அமைச்சர் அருண்ராஜ் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## S.C.S மெட்ரிக் மேனிலைப்பள்ளிக்கு விருது




தமிழ்நாடு யோகா ஃபெடரேஷன் வேர்ல்ட் சிலம்பம் ஸ்போர்ட்ஸ் அகாடமி நடத்திய 3000 மாணவர்கள் பங்குபெற்ற யோகா மற்றும் சிலம்பம் போட்டியில் S.C.S மெட்ரிக் மேனிலைப்பள்ளி மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் த.வெ.க. பொதுச்செயலாளர் திரு.N.ஆனந்த் தலைமையில் மாண்புமிகு அமைச்சர் திரு.ப.வெங்கடரமணன் அவர்கள், மற்றும் சபாநாயகர் திரு. JCD. பிரபாகரனின் மகன் திரு.அமலன்சாம்ராஜ் அவர்கள், குரோம்பேட்டையில் உள்ள S.C.S மெட்ரிக் மேனிலைப்பள்ளி தாளாளர் திரு. கிருஷ் சந்தானம் அவர்களுக்கு விருது வழங்கி கௌரவித்தனர்.




# விநாயகர் சதுர்த்தி வரலாறு!



விநாயக சதுர்த்தி என்பது விநாயகரின் முக்கியமான விழாவாகும். ஆண்டுதோறும் ஆவணி மாதத்தின் சதுர்த்தி நாள் அன்று கொண்டாடப்படுகிறது. பொதுவாக விநாயகரின் பிறந்த நாளாக கொண்டாடப்படுகிறது. பரமசிவன் கணேசனை கணங்களின் தலைவனாக 'கணபதி' யாக நியமித்தார். அவருக்கு அனிமா, மகிமா முதலிய அஷ்டசித்திகளையும் மனைவிகளாக பிரம்மதேவன் அளித்து கணபதியைப் பலவாறு துதி செய்தார். கணபதியும் மகிழ்ந்து 'பிரம்மனே, வேண்டிய வரம் கேள் என்று கூற பிரம்மன் 'என் படைப்பெல்லாம் தங்கள் அருளால் இடையூரின்றி நிறைவேற வேண்டும் என்று வரம் கேட்க விநாயகரும் பிரம்மனுக்கு வரமளித்தார். இந்து மக்கள் அனுஷ்டிக்கின்ற விரதங்களில் விநாயக சதுர்த்தி விரதம் முக்கியமான ஒன்று. ஒவ்வோர் ஆண்டும் ஆவணி மாதச் சுக்கிலபட்ச சதுர்த்தித்திதியன்று விநாயக சதுர்த்தி அனுஷ்டிக்கப்படுகின்றது. அன்றைய தினம் உலகெங்கணுமுள்ள இந்துக்கள் பயபக்தியோடு விநாயகரை வழிபட்டு, உண்ணா நோன்பிருந்து, தான தர்மங்கள் செய்து கொண்டாடுகின்றனர். நாட்டுக்கு நாடு அந்தக் கொண்டாட்டங்கள் வேறுபட்ட முறைகளில் கொண்டாடப்படுவதைக் காணலாம். இவ்விழா மராட்டிய மன்னன் சத்திரபதி சிவாஜி ஆட்சிக் காலத்திலேயே நடத்தப்பட்டிருக்கிறது. அது அந்த நாட்டின் தேசிய விழாவாகவும், கலாச்சார விழாவாகவும் கொண்டாடப்பட்டிருக்கிறது. பின்னர் பீஷ்வாக்கள் ஆட்சிக் காலத்திலும் இந்த விநாயகர் வழிபாடு என்பது தொடர்ந்து நடந்திருக்கிறது. பிறகு அது மகாராஷ்டிரா மாநில மக்களின் குடும்ப விழாவாக மாறிவிட்டது. மக்கள் தங்கள் வீடுகளிலும் பிள்ளையாரை வைத்து வணங்க ஆரம்பித்திருக்கிறார்கள். அதன் பிறகு சுதந்திர போராட்டக்காலத்தில் தான், இந்துமதத்தின் பால் ஈர்ப்புக்கொண்ட அன்றைக்கு இருந்த இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான பாலகங்காதர திலகர் இதை ஆண்டாண்டு பொதுமக்கள் இணைந்து நடத்தும் திருவிழாவாக மாற்றினார். அதன் பிறகு தான் மகாராஷ்டிரா மாநிலத்தில் விநாயகர் சதுர்த்தியன்று, வசதிபடைத்தவர்கள் எல்லாம் தங்கள் வசதிக்கேற்ப உயரமான விநாயகர் சிலைகளை செய்து, தங்கள் பகுதி மக்கள் சேர்ந்து கொண்டாடும் விழாவாக நடத்தினர். ஏழை மக்களுக்கு சில்லறை காசுகளையும் ரூபாய் நோட்டுகளையும் இதன் போது வழங்கினர். வெகுகாலத்தின் பின்னரே தமிழகத்தில் இவ்விழா அறிமுகப்படுத்தப்பட்டு கொண்டாடப்பட்டது.

## சிதறு தேங்காய் எதற்கு?



வித்யுன்மாலி, தாருகாக்ஷன், கமலாக்ஷன் ஆகிய அசுரர்களையும் அவர்களின் கோட்டைகளையும் சிவனார் அழிக்கப் புறப்பட்டபோது, தேர் அச்சு முறிந்து தடை ஏற்பட்டது. விநாயகரை வேண்டிக் கொள்ளாமல் புறப்பட்டதால் ஏற்பட்ட இடர் இது என்பதை உணர்ந்த ஈசன், கணபதியை எண்ணினார். மறுகணம் அங்கு தோன்றிய கணபதிக்கு உகந்த காணிக்கையைத் தருவதாகச் சொன்னார் சிவனார். அப்போது, முக்கண்ணனையே தனக்குக் காணிக்கையாகத் தர வேண்டும் என்றார் கணபதி. எனவே ஈசன், தன்னைப் போல் மூன்று கண்களும், சடையும் உடைய தேங்காயை கணபதிக்குப் படைத்தருளினார். அன்று முதல், தடைகள் நீங்கிட விநாயகருக்குத் தேங்காய் உடைக்கும் வழக்கம் ஏற்பட்டது.

# பிள்ளையாரை ஏன் சாலை ஓரங்களில் வைத்து வழிபடுகிறோம்



மற்ற தெய்வங்களைப்போல் அல்லாமல், பிள்ளையாரை மட்டும் சாலை ஓரங்களிலும் மரத்தடிகளிலும் கூட வைத்து வழிபடுகிறோமே... அது சரியா? அவரை தலையில் குட்டிக் கொண்டு வணங்குவதன் காரணம் என்ன? என்பது குறித்து காஞ்சி மஹா ஸ்வாமிகள் அளித்த அருளுரை இது.... பிள்ளையார் ஏழை எளியவர்களுக்கெல்லாம் அருள் செய்யும் எளிய சுவாமி. மஞ்சள் பொடியிலும், களிமண்ணிலும், மஞ்சள் பொடியிலும், வெல்லத்திலும் கூட பிள்ளையார் பிடித்து வழிபட சாஸ்திரம் அனுமதிக்கிறது. சொல்லப்போனால் வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி அவருக்கே நைவேத்தியம் செய்யலாம். அந்த அளவுக்கு எளிமையான சுவாமி பிள்ளையார். அவரை வழிபட நாம் நிறைய சாஸ்திரம் படிக்கவேண்டும் என்பதில்லை. ஒன்றும் படிக்காதவனுக்குக் கூட அவர் கூப்பிட்ட உடனே வந்துவிடுவார். மற்றசுவாமிகளை நாம் தரிசனம் செய்வது என்றால், நாம் அதற்காக ஒரு காலம் பார்த்து நேரம் பார்த்து, குளித்து முழுகி, அர்ச்சனை சாமான்கள் வாங்கிக் கொண்டு கோயிலுக்குப் போகவேண்டி இருக்கிறது. போனாலும் நேரே சுவாமியிடம் போய்விடமுடியாது. பிராகாரத்தைச் சுற்றிக்கொண்டு போகவேண்டும். அப்படியும் சுவாமிக்கு ரொம்பவும் பக்கத்தில் போய்விடமுடியாது. கொஞ்சம் தள்ளித்தான் நிற்கவேண்டும். ஆனால், பிள்ளையார் அப்படி இல்லை. சாலை ஓரத்திலும் மரத்தடியிலும்கூட அவர் அமர்ந்துகொண்டிருக்கிறார். கிட்டே போய் கும்பிடலாம். ஆபீசுக்கோ, கடைக்கோ, பள்ளிக்கூடத்துக்கோ போகிற வழியிலும்கூட அவரை தலைநிமிர்ந்து பார்த்து வணங்கலாம். அதிலேயே நமக்கு சொல்லத் தெரியாத சந்தோஷம் உண்டாகிவிடும். அவர் எளிய குழந்தை வடிவமான சுவாமி. பிள்ளையார் வழிபாட்டுக்கென்றே சில அம்சங்கள் இருக்கின்றன. சிதறு தேங்காய் போடுவது, நெற்றியில் குட்டிக்கொள்வது, இரண்டு கைகளை குறுக்காக மறித்து இரண்டு காதுகளையும் பிடித்துக்கொண்டு, முட்டிக்கால் தரையில் படுகிற மாதிரி தோர்ப்புக்கரணம் போடுவது ஆகியவை பிள்ளையார் வழிபாட்டில் அடங்கி இருக்கின்றன. யோகசாஸ்திரம் என்று ஒன்று இருக்கிறது. அதிலே நாம் நாடிகளில் ஏற்படுகிற சலனங்களால், எப்படி மனதையும் நல்லதாக மாற்றிக்கொள்ளலாம் என்று வழிசொல்லப்பட்டுஇருக்கிறது. நம்முடைய உடம்பை பல தினுசுகளாக வளைத்துச் செய்கிற அப்பியாசங்களினால், சுவாசத்தின் போக்கில் உண்டாக்கிக் கொள்கிற மாறுதல்களால், நம்முடைய உள்ளம் உயருவதற்கான வழி அந்த யோக சாஸ்திரத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. நெற்றிப் பொட்டில் குட்டிக்கொள்வது, தோர்ப்புக்கரணம் போடுவது இவற்றால் நம்முடைய நாடிகளின் சலனம் மாறும். மனதில் தெய்வீகமான மாறுதல்கள் உண்டாகும். நம்பிக்கையுடன் செய்தால் அதற்கு நிச்சயமாகப் பலன் தரும்.

## மோதகம் பிறந்த கதை



கற்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்து, வானில் இன்றும் விண்மீனாய் வலம்வந்து அருள்பவள் வசிஷ்டரின் மனைவியான அருந்ததி. புண்ணிய பலன் காரணமாக ஒருமுறை வசிஷ்டரின் ஆசிரமத்துக்கு விஜயம் செய்தார் விநாயகர். அவர் வருவதை முன்னரே தெரிந்துகொண்ட அருந்ததி, அவருக்காக மோதகம் தயார் செய்தாளாம். பரபிரம்மன் இந்த அண்டமெங்கும் வியாபித்திருக்கிறது என்று தான் அறிந்ததை இவ்வுலகுக்கும் உணர்த்தும் வகையில், வெள்ளை மாவினால் செப்பு செய்து அதனுள் அமிர்தமயமான பூர்ணத்தைப் பொதிந்துவைத்து மோதகம் தயாரித்து, வசிஷ்டரிடம் கொடுத்து விநாயகருக்கு நைவேத்தியம் செய்யச் சொன்னாளாம். அப்படி அவள் அளித்த பிரசாதத்தையும், அதன் தத்துவச் சிறப்பையும் உணர்ந்த பிள்ளையார், அதன் உன்னதத்தை உலகுக்கு உணர்த்தும் விதமாக, மோதகத்தை எப்போதும் தன் திருக்கரங்களில் ஏந்திக் கொண்டிருக்கிறாராம். அருந்ததி மூலம் நமக்குக் கிடைத்த அந்த அருள் பிரசாதத்தைப் போன்றே, நாம் வாழ்வும் இனிப்பும் தித்திப்புமாகப் பூரணத்துவம் பெற பிள்ளையாரை வழிபட்டு வரம் பெறுவோம்.

## விநாயகருக்கு பிடித்தவை



மலர்கள்: புன்னை, மந்தாரை, மகிழம், பாதிரி, தும்பை, அரளி, ஊமத்தை, சம்பங்கி, மாம்பூ, தாழம்பூ, முல்லை, கொன்றை, எருக்கு, செங்கழுநீர், செவ்வரளி, வில்வம், குருந்தை, பவளமல்லி, ஜாதிமல்லி, மாதுளம், கண்டங்கத்திரி.

அபிஷேகப் பொருட்கள்: தண்ணீர், எண்ணெய், சீயக்காய், சந்தனாதித்தைலம், மாப்பொடி, மஞ்சள் பொடி, திரவியப் பொடி, பஞ்சகவ்யம், ரஸப்பஞ்சாமிர்தம், பழப்பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர், தேன், கரும்புச்சாறு, பழரகங்கள், இளநீர், சந்தனம், திருநீறு, குங்குமம், பன்னீர்.

இலைகள் 21: மாசி, பருஹதி எனும் கிளா இலை, வில்வம், அருக்கு, ஊமத்தை, இலந்தை, நாயுருவி, துளசி, மாவிலை, தங்க அரளி, விஷ்ணுகிரந்தி, மாதுளை, மருவு, நொச்சி, ஜாதிக்காய் இலை, நாரிசங்கை, வன்னி, அரசு, நுணா, எருக்கு, தேவதாரு.

நிவேதனப் பொருட்கள் 21: மோதகம், அப்பம், அவல், பொரிகடலை, கரும்பு, சுண்டல், சுகியன், பிட்டு, தேன், தினை மாவு, பால், பாகு, கற்கண்டு, சர்க்கரைப் பொங்கல், பாயசம், முக்கனிகள், விளாம்பழம், நாவற்பழம், எள்ளுருண்டை, வடை, அதிரசம்.

# புரட்டாசி முதல் சனிக்கிழமை பெருமாளுக்கு தளிகை செய்வது எப்படி?



புரட்டாசி சனிக்கிழமைகளில் தளிகை அல்லது படையல் இட்டு வழிபடும் முறை உண்டு. புரட்டாசி முதல் சனிக்கிழமை. புரட்டாசி சனிக்கிழமையில் பெருமாளுக்கு தளிகை போடுவது முதல் சனிக்கிழமை மற்றும் மூன்றாம் சனிக்கிழமைகளில் செய்யப்படும். புரட்டாசியின் இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமைகளில் மஹாளய பட்சம் மஹாளய அமாவாசை. இதுபோல் வருவதால் அந்த நாட்களில் தளிகை இட்டால் அந்த பிரசாதத்தை நம்மால் சாப்பிட முடியாது. அதனால்தான் இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமைகளை தவிர்க்க வேண்டும் என சொல்லுவார்கள்.

வீட்டில் உள்ள பெருமாளின் உருவப்படத்தை ஒரு மனைப்பலகையில் எடுத்து வைத்து அழகாக அலங்கரிக்க வேண்டும். தங்களுக்குக் கிடைக்கும் மலர்களைப் பயன்படுத்தி அலங்கரிக்கலாம். குறிப்பாக பெருமாளுக்குப் பிடித்தமான துளசி இருப்பது அவசியம். பெருமாளின் படத்திற்கு முன் சிறிய விநாயகர் விக்ரஹம் அல்லது மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

அதன் பின்பு பெருமாள் படத்திற்கு முன் மூன்று இலைகள் போட்டு ஐந்து வகை சாதத்தை நைவேத்தியமாகப் படைக்க வேண்டும். சர்க்கரை பொங்கல், புளியோதரை, எலுமிச்சை சாதம், அல்லது நெல்லிக்காய் சாதம், தேங்காய் சாதம், தயிர் சாதம் வெங்காயம் சேர்க்காமல் மிளகு மட்டும் போட்டு செய்யும் உளுந்து வடை சுண்டல் பானகம் நெய்வேத்தியமாகப் படைக்க வேண்டும். மாவிளக்கு படைத்து வழிபடும் வழக்கம் இருந்தால் அதையும் சேர்த்து வழிபடலாம். இந்த சாதங்களை வரிசையாக வைத்து வழிபடலாம் அல்லது இந்த சாதங்களை கொண்டு பெருமாளின் திருமுகத்தை வரைந்தும் வழிபடலாம். தீப, தூப ஆராதனை காட்டி கோவிந்த நாமம் சொல்லி வழிபட்ட பிறகு தளிகையில் வைக்கப்பட்ட சாதத்தை நாம் சாப்பிட வேண்டும்.

சனிக்கிழமையில் முழுவதுமாக உபவாசம் இருந்து பகலில் தளிகை போட்டு வழிபட்ட பிறகு அந்தப் பிரசாதத்தை சாப்பிட்டு விரதத்தை நிறைவு செய்து கொள்ளலாம் அல்லது காலையில் எளிமையான உணவு எடுத்துக்கொண்டு விரதம் இருக்கலாம். தளிகை போட்ட பிறகு கோவிந்த நாமும் சொல்லி வழிபட வேண்டும். 'கோவிந்தா கோவிந்தா' என சொல்லி வழிபடும்போது கஷ்டங்கள் மீண்டும் வராது என்பது ஐதீகம். தெரிந்தவர்கள் விஷ்ணு சஹஸ்ரநாமம் சொல்லி வழிபடலாம். தெரியாதவர்கள் கோவிந்த நாமம் மட்டும் சொல்லி வழிபடலாம். வீட்டில் அஷ்ட லட்சுமியின் அருளும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.


# CLASSiFiEDS

## PLOT SALE

PLOT FOR SALE
CHROMEPET NEAR MIT GATE
PLOT SIZE: 1000 SQ.FT
RATE: ₹8,500/- PER SQ.FT
YOUR FUTURE BEGINS HERE
PRIME LOCATION BEST INVESTMENT
9361883404 CONTACT FOR MORE DETAILS

PLOT FOR SALE
KALVOY NR. GUDUVANCHERY GST
1200 SQ.FT
8939060826

## INDEPENDENT HOUSE

IND HOUSE FOR SALE
@ CHROMPET, NEMILICHERY
2 BHK | LAND AREA 517 SQFT
BUILT UP AREA 1270 SQFT
CCP | 80722 30451

குரோம்பேட்டை, அஸ்தினாபுரம், திருமலைநகர்
மனையுடன் கூடிய வீடு விற்பனை
30x60 1800 sqft
12 years Old
SRI RUDHRA REAL ESTATES THIRUMALAI NAGAR
97899 56017 / 99447 20714

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல் விளம்பரம் செய்ய 2 x 4cm Rs. 525/- (Colour) மட்டும்
044-22236399 / 89395 26999

FOLLOW GST ROAD NEWS ON

## FLAT RESALE

FLAT FOR RESALE
@CHROMPET
3BHK - 1120 SQFT | 4 BALCONY
FIRST FLOOR | EAST FACING
Rs.65L
CALL : 99620 03409

FLAT FOR RESALE
@CHROMPET VENKATRAMAN NAGAR
@MUDICHUR
2BHK 875 SQFT UDS - 460 SQFT
LIFT | CAR PARKING
80722 30451

FLATS FOR RESALE
@CHROMEPET ,GANAPATHYPURAM
2BHK ,660 SQFT
G.F | UDS - 430
@CHROMEPET BALAJI HOSPITAL BACKSIDE
3BHK ,1200 SQFT
2ND FLOOR
80722 30451

FLAT FOR RESALE
@CHROMPET PURUSHOTHAM NAGAR
1 BHK 550 SQFT UDS 300 SQFT
BHARATHIPURAM
2 BHK 1000 SQFT UDS 300 SQFT
FIRST FLOOR,CCP
CALL 80722 30451

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.


# புரட்டாசி மாதத்தில் வரும் விரதங்களும் அதன் பலன்களும் !!



புரட்டாசி சனிக்கிழமையில் விரதம் இருந்தால் குலதெய்வத்தின் அருள் பரிபூரணமாக கிடைக்கும்.

சித்தி விநாயகருக்கு புரட்டாசி மாதம் வளர்பிறை சதுர்த்தி திதியில் விரதம் இருந்து வழிபட்டால் எதிரிகள் தொல்லைகள் இருக்காது. புரட்டாசி சனிக்கிழமையில் தான் சனிபகவான் அவதரித்தார். அதன் காரணமாக, அவரால் ஏற்படும் கெடுபலன்கள் குறைய காக்கும் கடவுளான திருமாலை வழிபடுகிறோம்.

புரட்டாசி மாதம் சங்கடஹர சதுர்த்தியன்று விநாயகரை நினைத்து விரதம் கடைபிடித்தால் சுகபோக வாழ்வு கிடைக்கும். செல்வம், ஆயுள், ஆரோக்கியம் ஆகிய மூன்றும் குறைவின்றி கிடைக்க புரட்டாசி மாதத்தில் விரதத்தை மேற்கொள்கிறோம்.

புரட்டாசி பௌர்ணமி தினத்தன்று அம்பாளுக்கு 4 வண்ணங்களில் ஆடையும், ரத்தினக்கல் ஆபரணமும் அணிவித்து, நைவேத்தியமாக இளநீர் படைத்து வந்தால், குடும்பத்திற்கு தேவையான செல்வங்கள் வந்து சேரும் என்பது ஐதீகம்.

கடவுளுக்கு காணிக்கை மற்றும் நேர்த்திக்கடன்கள் செலுத்த புரட்டாசி மாதமே சிறந்த மாதமாக கருதப்படுகிறது. கல்வித்தடை, திருமணத்தடை, நோய், பணப்பிரச்சனை உள்ளவர்கள் புரட்டாசி திருவோணம் நட்சத்திரத்தன்று பெருமாளை வழிபடுவதால் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமை மட்டுமின்றி திங்கட்கிழமையும், புதன்கிழமையும் பெருமாள் வழிபாட்டிற்கு உகந்த நாட்களாகும். அன்றைய வழிபாடுகள் மகாலட்சுமியை மகிழ்ச்சி அடைய செய்யும்.

புனிதமிக்க புரட்டாசி மாதத்தில் வரும் விரதங்கள் புண்ணிய பலன்களை அதிகம் தரும் என்பது ஐதீகம். ஜேஷ்டா விரதம், மகாலட்சுமி விரதம், தசாவதார விரதம், நவராத்திரி, லலிதா விரதம் ஆகிய விரதங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை.

## பிரிக்ஸ் மாநாட்டில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் பேச்சு.



"போட்டித்தன்மை இப்போதுமோசமான வடிவங்களை எடுத்து வருகிறது. போட்டியில் முன்னிலை பெறுவதற்காக, சர்வ தேச போக்குவரத்து வழித்தடங்கள் முடக்கப் பட்டுள்ளன; குழாய் வழித்தடங்கள் அழிக்கப் பட்டுள்ளன; மேலும் கப்பல்கள் கூட கைப்பற்றப்பட்டுள்ளன. ரஷ்யா மீது 30,000க்கும் மேற்பட்ட தடைகள் விதிக்கப்பட்டுள்ளன; இது மற்ற அனைத்து நாடுகள் மீதும் விதிக்கப்பட்ட ஒட்டுமொத்த தடைகளின் எண்ணிக்கையை விட இருமடங்காகும். நாங்கள் இப்போது நம்பகமான மற்றும் கணிக்கக்கூடிய கூட்டாளிகளுடன் உறவுகளை வளர்த்து வருகிறோம்.

## கோவையில் விதை விநாயகர் சிலை விற்பனை

விநாயகர் சதுர்த்தி பண்டிகையையொட்டி, கோவையில் விநாயகர் சிலைகள் தயாரிப்பும், விற்பனையும் தீவிரமடைந்துள்ளது. குறிப்பாக, சாலையோரங்களில் சிறிய அளவிலான விநாயகர் சிலைகள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

அதன் ஒரு பகுதியாக, கவுண்டம்பாளையம் ஹவுசிங் யூனிட் அருகே ‘விதை விநாயகர்’ சிலை தயாரிக்கப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சிலை விற்பனையாளர் அருணா தேவி கூறும்போது, “சுத்தமான களிமண்ணால் செய்யப்பட்ட விதை விநாயகர் சிலைகளின் உட்புறத்தில், கீரை விதைகள் வைக்கப்பட்டிருக்கும். உயர அளவை பொருத்து ரூ.100 முதல் ரூ.1,500 வரை விற்கப்படுகிறது.

வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்கள் வீட்டில் சிலை வைத்தால் அவற்றை எங்கு சென்று கரைப்பது என்ற சந்தேகம் எழும். அதை தவிர்க்க, விதை விநாயகர் சிலை தயாரிக்கப்பட்டுள்ளது. இச்சிலைகளை வழிபாடு முடிந்தவுடன் வீடுகளில் உள்ள பூந்தொட்டிகளில் போட்டு தண்ணீர் ஊற்றினால் மண் கரைந்துவிடும். அதில் உள்ள விதைகள் செடியாக முளைக்கத் தொடங்கி விடும். இதன்மூலம் சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பு மட்டுமின்றி, செடிகள் வளர்த்த பலனும் கிடைக்கும்” என்றார்.

## சென்னை தூத்துக்குடி விமான கட்டணம் 4 மடங்கு உயர்வு

விநாயகர் சதுர்த்தி தொடர் விடுமுறை காரணமாக ஆம்னி பஸ் கட்டணம் மூன்று மடங்கு உயர்ந்துள்ளது அதே சமயம் விமான கட்டணம் 4 மடங்கு உயர்ந்துள்ளது சென்னையில் இருந்து மதுரைக்கு கட்டணம் 19761 ரூபாய் சென்னையில் இருந்து தூத்துக்குடிக்கு கட்டணம் 1753 ரூபாய் ஆகும்.

## FIRல் விஜய் பெயர் : ரகுபதி பரபரப்பு பேட்டி

கரூர் சம்பவத்தின் போது முதல் குற்றவாளியாக விஜய்யை சேர்க்க வேண்டும் என்று சட்டத்துறை அமைச்சர் என்கிற முறையில் நான் அன்றைய முதல்வர் ஸ்டாலினிடம் மன்றாடினேன் என்று புதுக்கோட்டையில் முன்னாள் அமைச்சர் ரகுபதி கூறினார்

## மின்வெட்டு போராட்டம்: முன்னாள் எம்எல்ஏவுக்கு எதிர்ப்பு

நெல்லை : விக்கிரமசிங்கபுரம் அருகே அறிவிக்கப்படாத மின்வெட்டைக் கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் அதிமுக சார்பாக அம்பாசமுத்திரம் தொகுதியில் வெற்றி பெற்று பதவியை ராஜினாமா செய்து தவெகவிற்கு தாவிய இசக்கி சுப்பையா பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது அங்கிருந்தவர்கள் இசக்கி சுப்பையாவை ஓடு ஓடு எனக்கூறியதால் பரபரப்பு ஏற்பட்டது.

## விநாயகர் சதுர்த்தி ஸ்பெஷல்: கடலைபருப்பு பூர்ண கொழுக்கட்டை



தேவையான பொருட்கள் : வெல்லம் கால் கிலோ, பச்சரிசி மாவு கால் கிலோ, கடலைபருப்பு ஒரு டம்ளர், உப்பு தேவையான அளவு, தேங்காய் துருவல் மூன்று தேக்கரண்டி செய்முறை : * வாணலியில் வெல்லத்தை போட்டு சிறிது தண்ணீர் சேர்த்து பாகு காய்ச்சவும். * கடலை பருப்பை 30 நிமிடம் ஊற விட்டு ஒன்றிரண்டாக மிக்ஸியில் பொடித்துக் கொள்ளவும். அதை பாகுடன் சேர்த்து ஒரு சிட்டிகை உப்பு சேர்த்து கிளறவும். * பாகுடன் நன்றாக மிக்ஸ் ஆனதும் அதனுடன் தேங்காய் துருவலை சேர்த்து கிளறவும். தண்ணீர் இல்லாமல் வற்றி வாணலியில் ஒட்டாமல் வரும். அப்போது தனியே எடுத்து ஆற வைக்கவும். * பச்சரிசி மாவுடன் கொஞ்சம் உப்பு சேர்த்து கொதித்த தண்ணீரை சிறிது சிறிதாக சேர்த்து கரண்டியின் காம்பால் கிளறி பின் பொறுக்கும் சூட்டில் கையால் பிசைந்து வைக்கவும். * மாவை கையில் வைத்து விருப்பத்திற்கு ஏற்ப தட்டி அதன் உள்ளே பூரணம் சேர்த்து மூடி வைக்கவும். முழு மாவிலும் இப்படி செய்து வைக்கவும்.
* அதனை இட்லி பாத்திரத்தில் 10 நிமிடம் வேக வைத்து எடுக்கவும்.
* சூடான சுவையான கடலைபருப்பு பூர்ண கொழுக்கட்டை ரெடி.

## சர்க்கரை நோய்க்கு இயற்கை மருத்துவம்



மருத்துவம் இல்லாமல் சர்க்கரை நோயை விரட்டியடிக்க இரண்டே இரண்டு வழிகள்தான் இருக்கின்றன. ஒன்று உணவு. மற்றொன்று உடற்பயிற்சி. இவை இரண்டுமே சர்க்கரை நோயாளிகளுக்கு நல்ல தீர்வைத் தரும். உணவைப் பொறுத்தவரை தீட்டிய அரிசியை விட கைக்குத்தல் அரிசியையே பயன்படுத்த வேண்டும். இது ரத்தத்தில் சர்க்கரை அளவு சேர்வதை வெகுவாக குறைக்கிறது. கோதுமை, கம்பு, கேப்பை போன்றவை அரிசியை விட அடர்த்தியான பொருட்களாக இருப்பதால் ரத்தத்தில் சர்க்கரை அளவு குறைகிறது. அதனால் சர்க்கரை நோயாளிகளின் கணையம் அதிக சிக்கலுக்கு உள்ளாகாமல் காப்பாற்றப்படுகிறது. நார்ப்பொருள் அதிகம் நிறைந்த உணவை உட்கொள்ள வேண்டும். அது ரத்தத்தில் அதிக அளவு சர்க்கரை ஏறுவதை தடுக்கிறது. காய்கறிகள், கீரைகள் அதிகமாக பயன்படுத்தலாம். இனிப்பில்லா பழங்களை உண்ணலாம். பப்பாளி, தக்காளி, அன்னாசி, தர்பூசணி, பேரிக்காய், நாவல்பழம், கொய்யா, மாதுளை கொஞ்சமாக சேர்த்துக் கொள்ளலாம். மா, பலா, வாழை அறவே கூடாது. உடற்பயிற்சியைப் பொறுத்தவரை சர்க்கரை நோயாளிகள் உடலின் எல்லா பகுதிகளுக்கும் உடற்பயிற்சி கொடுக்கவேண்டியது மிக மிக அவசியம். ரத்த ஓட்டம் சீராக சென்று கொண்டே இருக்க வேண்டும். நடக்கும் போது கைகால்களை வீசி கொஞ்சம் வேகமாக நடப்பது நல்லது. யோகாசனங்கள் நல்ல பலனைத் தரும். உடலின் எல்லா தசைநார்களையும் இயக்கிவிடும் அளவிற்கு ஆசனங்களில் பல வகைகளைத் தேர்வு செய்து செய்வது நல்லது. உடற்பருமன், தொந்தி உள்ள நோயாளிகள் அவற்றைக் குறைத்துக் கொள்வது நல்லது. சர்க்கரை நோய் ஒரு அகச்சுரப்பியின் கோளாறு. அதில் தைராய்டு, பிட்யூட்டரி போன்ற மற்ற சுரப்பிகளும் ஒருங்கிணைந்து வேலை செய்வது அவசியம். உணர்ச்சிவசப்படுதல் (டென்ஷன்) மூலமும் சர்க்கரை நோய் அதிகரிப்பதாக ஆராய்ச்சிகள் சொல்கின்றன. தியானம் டென்ஷனைக் குறைக்கிறது. அதனால் தியானம் மிக அவசியம். யோகா, தியானம் ஆகியவற்றை ஒரு நாளைக்கு 45 முதல் 60 நிமிடம் செய்தால் போதும் சர்க்கரையின் அளவு கட்டுக்குள் இருக்கும்.

## திருச்செந்தூரில் கடல் உள்வாங்கியது

திருச்செந்தூரில் கரையில் இருந்து 50 அடிக்கு கடல் உள்வாங்கியது .. பச்சைநிற பாசிகளுடன் ஒரு அடி உயரம் கொண்ட கருப்பசாமி சிலை தென்பட்டுள்ளது

இதுபோல் ஏராளமான சிலைகள் கரை ஒதுங்குவதால் இடையூறு இல்லாமல் சிலைகளை அகற்ற பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பிணவறையில் ரீல்ஸ் எடுத்த த.வெ.க ரவுடி கைது

சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனை பிணவறையில் சடலத்துடன் செல்ஃபி, ரீல்ஸ் எடுத்த த.வெ.கவைச் சேர்ந்த ரவுடி தீனா உள்பட 3 பேர் கைதுசெய்யப்பட்டனர். மூச்சுத்திணறலால் உயிரிழந்த எர்ணாவூரைச் சேர்ந்த ரவுடி பல்லு ஆனந்தின் சடலத்தைப் பார்க்க, பேட்டரி கார் டிரைவர் மூலம் பிணவறை பணியாளருக்கு லஞ்சம் கொடுத்து உள்ளே சென்றுள்ளனர். ரவுடிகள் தீனா, சதீஷ், பேட்டரி கார் டிரைவர் சங்கர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற ஜாமினில் விடுதலை.செய்யப்பட்டனர்.

## நடிகை கீர்த்தி சுரேஷ் லண்டன் போனாரா?

நடிகை கீர்த்தி சுரேஷ் முதல்வர் விஜய் லண்டன் போகும் நாளில் சென்னை விமான நிலையத்திற்கு வந்தார் உடனே அவர் லண்டன் செல்வதாக செய்தி வெளியானது ஆனால் உண்மையில் அவர் கனடாவில் நடக்கும் அவரது பட வெளியீட்டு விழாவில் பங்கேற்க புறப்பட்டு சென்றார் இருந்தாலும் சமூக ஊடகங்களில் அவரும் லண்டன் போனதாக செய்தி வெளியானதை தொடர்ந்து அதை கிண்டல் செய்யும் விதமாக கீர்த்தி சுரேஷ் எக்ஸ் களத்தில் பதிவு செய்துள்ளார்.

## பிரிக்ஸ் மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பேச்சு...

பிரிக்ஸ் (BRICS) நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்திற்கான முக்கிய பத்து தடைகளை நீக்குமாறு பிரிக்ஸ் கவுன்சிலை நான் வலியுறுத்துகிறேன். உலகளாவிய நிச்சயமற்ற சூழலுக்கு மத்தியிலும், இந்தியா வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான உத்தரவாதத்தை அளிக்கிறது. 2014ஆம் ஆண்டு முதல், இந்தியா சுமார் 40 நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை (FTAs) மேற்கொண்டுள்ளது. இந்தியா ஒரு உலகளாவிய தீர்வுகள் மையமாக உருவெடுத்து வருகிறது.


குரோம்பேட்டை அருகே புதிதாக துவங்கவிருக்கும் வங்கி நிறுவனத்துக்கு 14 நபர்கள் உடனடியாக தேவை.
RETIRED, VRS, HOUSEWIFE, PRIVATE, BUSINESS MAN
விண்ணப்பிக்கலாம்.
வயது: 30 முதல் 75 வரை.
தகுதி: 10 TO ANY DEGREE
9080846080/9444701017
































தாம்பரம் மாநகராட்சியின் மூலமாக மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மண்டலம் 3 சிட்லபாக்கம் 43வது வார்டுஸ்ரீ சர்வமங்களா நகர் இரண்டாவது பிரதான சாலையில் செம்பாக்கம் ஏரிக்கரையை ஒட்டியுள்ள மழை நீர் வடிகால்வாய் தூர்அகற்றப்படும் பணி உதவி பொறியாளர் அரவிந்த் மேற்பார்வையில் துவங்கப்பட்டதை மாமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் சி.ஜெகன் பார்வையிட்டார். இன் நிகழ்வின் போது சர்வமங்களா நகர் பொது நல சங்கத்தின் செயலாளர் ரவி மற்றும் ஒப்பந்ததாரர் உடன் இருந்தனர்.




காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் சட்டமன்றத்தில் தமிழக முதல்வர் விஜய் பேச்சை கண்டித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் T.R.பாலு கண்டன முழக்கங்களை எழுப்பி, கண்டன உரையாற்றினார். இந்நிகழ்வில் பல்லாவரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி,தாம்பரம் மாநகர செயலாளர் S.R.ராஜா.Ex.M.L.A. திமுக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்ட போது எடுத்த படம்.

## மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகம்: சென்ட்ரல் - மதுரை, தாம்பரம் - மதுரை இடையே சிறப்பு ரெயில் இயக்கம்

சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் இருந்து வருகிற 16ந்தேதி (புதன்கிழமை) மாலை 4.10 மணிக்கு புறப்பட்டு செல்லும் சிறப்பு எக்ஸ்பிரஸ் ரெயில் (வ.எண்.06153), மறுநாள் காலை 4.30 மணிக்கு மதுரை சென்றடையும். மறுமார்க்கமாக, மதுரையில் இருந்து வருகிற 17ந்தேதி (வியாழக்கிழமை) மாலை 3.30 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06154), மறுநாள் காலை 3.30 மணிக்கு சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்துக்கு வந்தடையும்.அதேபோல, தாம்பரம் ரெயில் நிலையத்தில் இருந்து வருகிற 16ந்தேதி இரவு 9.40 மணிக்கு புறப்பட்டு செல்லும் சிறப்பு ரெயில் (06157), மறுநாள் காலை 5 மணிக்கு மதுரை சென்றடையும்.

மறுமார்க்கமாக, மதுரையில் இருந்து வருகிற 17ந்தேதி இரவு 7 மணிக்கு புறப்படும் சிறப்பு ரெயில் (06158), மறுநாள் காலை 3.20 மணிக்கு தாம்பரம் வந்தடையும்.












Published by K.MURUGANANTHAM ADITYAN Plot No: 4/7 A,Padmanaban Nagar, Karumariamman Kovil 1st Street,Chrompet -600 044. Printed by him B.Ashokkumar at Rathna Offset Printers,No.40,Peter's Road,Royapettah,Ch-14.Editor K.MURUGANANTHAM ADITYAN RNI NO.TNBIL / 013 / 48725